**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**அசல் வழக்கு எண். 3/2019**

**வாக்குமூலம்.வா.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜான் போஸ்கோ | தொழில் | |
| த/பெ. | சின்னப்பன் | வயது | 38 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 17.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்குப்போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். என்ன பரிகாரம் என்றால் அவர்கள் இருக்கும் வயலும், இடமும் அவர்களுக்கு வேண்டும் என்று வழக்குப்போட்டுள்ளார்கள். நான் குறிப்பிடும் சொத்தை எப்போது யார் வாங்கினார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. 2ம் வாதி செல்வம் ஏகணிவயல் கிராமத்தில் குடியிருக்கிறார். 1ம் வாதி ராஜாங்கம் அறந்தாங்கியில் குடியிருக்கிறார். வாதிகளின் தாயார் எந்த வருடம் இறந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கும்போது வாதிகள் இளவர்களாக இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு சொத்து வாங்கியது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.
2. தாவா சொத்துக்களுக்கான பட்டா யார் யார் பெயரில் இருக்கிறது என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்துக்களை விற்கும் அதிகாரமும் உரிமையும் யாரிடம் இருக்கிறது என்பது எனக்கு தெரியாது என்றாலும் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணையில்லை.**